17 பெப்ரவரி 2019

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 6ம் ஞாயிறு

தி ரு மு ழு க் கு ப் பெ ற் று அ னு ப் ப ப டு த ல்

மாதாந்திர கருப்பொருள்:

## புனிதத்திற்கு அழைத்தல்

# சாக்குப்போக்கு இனி இல்லை

வாராந்தோறும் நாம் அறிக்கையிடும் நம்பிக்கையிலேயே நம்மில் பெரும்பாலோர் வளர்ந்திருக்கிறோம். நமக்குத் தெரியாத விஷயம் எழும் போது சாக்குப்போக்குச் சொல்லி பின்வாங்குகிறோம். நாம் படித்த மறைக்கல்வி இதில் அடங்கவில்லை என்றும் நாம் புதியக் கிறிஸ்துவர்கள் என்றும் கூறிவிடுகிறோம். கத்தோலிக்கர்கள் என்பதால் அனைத்தையும் மெத்தனமான எடுத்துக் கொள்கிறோம்.



Image: ©123rf.com

நமது பெற்றோர் அல்லது ஞானப் பெற்றோர் காலத்தில், போதுமான சமயக் கல்வி கிடைக்கவில்லை. புனிதர்களைப் பின்பற்றி அவர்களை முன்னுதாரணமாக வைத்துக் கொண்டு அவர்களைப் போல் இருக்க விரும்பினர். நமது கத்தோலிக்க வீடுகளிலும் புனிதர்களின் படங்கள் முதன்மை இடத்தைப் பிடித்தது. இதனால் புனிதர்கள் தொடர்பான பக்தி முயற்சிகளும் செபங்களும் நமது சமுதாயப் பண்பாடாக மாறியது (பிரிந்த சகோதரர்களால் இதனை ஏற்றுக் கொள்ள முடியவில்லை). இயேசுவிற்கும் அதன் மணவாட்டி திரு அவைக்கும் உரிய கடமைகளை நிறைவேற்றுவதில் இருந்து விலக்குவது, புனிதர்களின் பக்தி முயற்சியின் நோக்கமல்ல. புனிதர்கள் நமக்கு முன்னுதாரணமாக இருந்து ஊக்கமளிக்கின்றனர்.

புனிதர்களைப் போல, கடவுளின் மீதான நம்பிக்கையை நாம் பற்றிக் கொள்கிறோம். விண்ணுலகில் முடிசூடும் நம்பிக்கை மற்றும் இயேசுவிற்கும் அவரது அரசுக்கும் நாம் பாத்திரமானவர்கள் என்னும் இந்த செய்தி திரு அவை வாழ்விலும் நடவடிக்கைகளிலும் நமது ஈடுபாட்டின் நிலையை எடுத்துக் காட்டுகிறது. கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்தவர்களிடமும், பின்னொரு காலத்தில் தலைவர்களாக தேர்வு செய்யப்பட்டவர்களிடமும் ஏற்பட்ட எண்ண மாற்றத்தினால், வாரயிறுதி திருப்பலிகளில் கலந்து கொள்ளும் கடமை மட்டும் போது என்ற நிலை ஏற்பட்டு விட்டது. அதிலும் ஈஸ்டர், கிறிஸ்மஸ் போன்ற விழாக்களோடு சிலர் நின்று கொண்டனர். சிலரோ தூதுரைப்பணி மற்றும் பக்தி காரணமாக தொடர்ந்து திரு அவை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

மலைப்பொழிவில் இயேசு, தமது இறையாட்சியின் புதிய நிலையை வெளிப்படுத்துகிறார். இயேசுவிற்கும் அவரது ஆட்சிக்கும் முழு கடப்பாடு கொண்டிருப்பதில், மலைப்பொழிவின் பேறுபெற்றோரின் குணங்கள் அடங்கியிருக்கிறது. பொருளாதார ரீதியிலான ஏழைகளை அல்ல, இயேசு வழங்கும் அரசாட்சியை விரும்பி, மீட்பின் மீது பசி-தாகம் கொள்ளும் ஏழைகளை அவர் சுட்டுகிறார். தற்போதைய நிலையில் சுகமாக வாழும் செல்வந்தர்கள், இயேசுவிற்கு முழு கடப்பாடு காட்ட தயாராகயில்லை. இதனால் இயேசுவின் வார்த்தைக்கு அவர்கள் செவி கொடுக்கவில்லை. **இனிமேலும் நாமும் சாக்குப்போக்கு சொல்லக்கூடாது.** உலகத்தின் எல்லை வரை நற்செய்தி போதிக்கப்படுகிறது. அந்த பெருமிதமான அருள்வார்த்தையை நாம் பெறுகிறோம். அவ்வார்த்தையில் நிலைத்து அதனை வாகை சூடுவோம்.

இந்த பேரின்ப நிலையைப் பிடித்துக் கொள்வோம். உலகம் தர முடியாத மகிழ்ச்சியையும் அருளையும் அது கொண்டுள்ளது. நமது மணவாளன் இயேசுவிற்கு தமது முழு கடப்பாட்டை தெரிவித்திருப்பதால், இந்த தெய்வீக திருமணத்திற்கு தமது முழு கடப்பாட்டை புலப்படுத்துவோம்.✝

---

**நமது அர்ப்பணத்தின் அளவைப் பொறுத்தே அன்பு நம்மை சூழ்ந்து கொள்ளும்.**

- புனித லிசியா தெரேசா

---

**இன்றைய விவிலிய குறிப்பு:**

எரேமியா 17: 5-8

திருப்பாடல்: 1: 1-2, 3-4, 6

1 கொரிந்தியர்: 15: 12, 16-20

லூக்கா 6: 17, 20-26

---

**வாரம் ஒரு வசனம்**

**இனிமேலும் நாமும் சாக்குப்போக்கு சொல்லக்கூடாது.**

INTERNAL CIRCULATION ONLY

BUL 07/2019

*Published by:* Peninsular Malaysia Pastoral Team

api@archkl.org



**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2019 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***திருமுழுக்கு அளித்து அனுப்புதல்***
*2019 ஜனவரி (தை) மாதத்தின் கருப்பொருள்:*
***புனிதத்திற்கு அழைக்கிறது***

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பொதுக்காலம் 6ஆம் ஞயிறு (ஆண்டு 3)** சனி 16-02-2019 - ஞாயிறு 24-02-2019
எரே : 17: 5-8 தி.பா: 1: 1-2, 3, 4-6 1 கொரி: 15: 12, 16-20 லூக்கா : 6: 17, 20-26
**"ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டவர் பேறு பெற்றவர்" - திபா 1**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 16 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித ரீத்தா) | |
| ஞாயிறு | 17 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (புனித பியோ)<br>திருப்பலி (ஆ) (புனித கிரகோரி)<br>திருப்பலி<br>திருப்பல (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |
| திங்கள் | 18 | 6.45 கா | திருப்பலி | |
| செவ் | 19 | 8.30 கா | திருப்பலி | |
| புதன் | 20 | காலை திருப்பலி நடைபெறாது | | *குருக்களுக்கான மாதாந்திர தியானம் (APC KL)* |
| வியா | 21 | 6.45 கா | திருப்பலி | |
| வெள் | 22 | 6.45 கா | திருப்பலி | *மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) திரு இருதய ஆண்டவர் சிற்றாலயம் - மார்ஜெரி* |

**பொதுக்காலம் 7ஆம் ஞரிறு (ஆண்டு 3)**
சாமு : 26: 2, 7-9, 12-13, 22-23 தி.பா: 103: 1-2, 3-4, 8, 10, 12-13 1 கொரி: 15: 45-49 லூக்கா : 6: 27-38
**"ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர் " - திபா 103**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 23 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித லியோ) | |
| ஞாயிறு | 24 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) குடும்ப வாழ்வு பணிக்குழு<br>திருப்பலி (ஆ) (புனித டெனிஸ்)<br>திருப்பலி (சீ)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பல (தே.மொழி)<br>மாலை 7.00 கம்.செபீர் (தே.மொ) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**2019 *மார்ச் (பங்குனி) மாத செய்திகள் / நிகழ்வுகள்***

1) பங்கு காணிக்கை:
அ) 09/10 பிப்ரவரி 2019 ரிம: 10,583.30
ஆ) சாகா சிற்றாலய திருவிழா ரிம:1,335.40
*இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!*

**2) பங்கு மக்களுக்கு ஓர் நினைவூட்டல்:**
**அ)** திருப்பலியின் நற்கருணைப் பெற வரும்போது உங்கள் உடைமைகள் குறிப்பாக கைப்பைகள் கவனம். இருக்கைகளில் வைத்துவிட்டு வரவேண்டாம். கூடுதல் கவனத்தோடு இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். நன்றி.
**ஆ)** ஆலய வளாகம் /உணவு விடுதி சுற்றுப்புறத்தில் புகைப்பிடிக்க அனுமதி இல்லை. உங்களுடைய ஒத்துழைப்புக்கு நன்றி.

**3) காலை சிற்றுண்டி விற்பனை: பங்கு சமயங்கள்/கிறிஸ்துவ சபைகளுக்கிடையிலான பணிக்குழு**வினர் இதை ஏற்பாடு செய்கின்றனர். நாள்:24/2/2019. வாங்கி ஆதரவு த்ருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**4)** **கிபுமுவ 2018/2019** வேட்பாளர்கள் (30 பேர்) தங்களின் தியானத்திற்காக செல்கிறார்கள். அவர்களை நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம்.

**5)** **தேசிய மொழியில் ஆல்ஃபா பயிற்சி** : பிப்ரவரி 3,10,24 மற்றும் மார்ச் 3 - நேரம்: பகல் 2.30- மாலை 6.30 வரை.
இடம்: மினவுதல் மாதா தேவாலய மண்டபம்.
தொடர்புக்கு: மரியா - 014-350 3718
அனைவரையும் வரவேற்கிறோம்

**6)** கீழ்க்கண்ட பணிக்குழுக்களை குருவானவர் சந்திக்கிறார் **நாள்: 17 / 2 / 2019**
அ) **பெண்கள் பணிக்குழு** மாலை 5.00 மணி விவிலிய அறை
ஆ) **குடியேற்றவாசிகளின் பணிக்குழு** மாலை 6.00 மணி விவிலிய அறை

**மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்**
அ) ராமசாமி பீட்டர் இறப்பு: 09/02/19
ஆ) பிலோமினா லிம் ஆ மே இறப்பு: 13/02/19
**முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக**

இன்று திருப்பலியை வழி நடத்திய **புனித பியோ** (புக்கிட் சிறி செனவாங்) அதிச வினருக்கு நமது நன்றிகள்

- **சீனப்புத்தாண்டு விருந்து 03-03-2018** இடம்:ரீஜெண்ட் உணவு விடுதி, சிரம்பான். ஒரு மேசை அல்லது ஒரு நபருக்கான டிக்கெட் வாங்கி இதில் கலந்துகொள்ளுங்கள். தொடர்புக்கு: பமேலா 016-630 6169
- **ஒளி/ஒலி கருவிகள் - பாடல் குழுவினரின் மேல் அறை:** இங்கிருக்கும் கருவிகளை திருப்பலி நேரத்தில் கையாளும்போது கூடுதல் கவனத்தோடு பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம். பழுது ஏதேனும் ஏற்பட்டால் தயவு செய்து பங்கு அலுவலகத்தில் தெரியப்படுத்தவும்.
- **சமயங்களுக்கிடையிலான உரையாடல் பணிக்குழுவினரின் கோல்ஃ விளையாட்டுப் போட்டி** நெகிரி செம்பிலான் பணிக்குழுவினர் இதை ஏற்பாடு செய்கின்றனர். நாள்:06-04-2019 காலை 7.00 மணி. சிரம்பான் இண்டர்னேஷனல் கோல்ஃப் கிளப் (SIGC). நபர் ஒருவருக்கு கட்டணம் ரிம:250/- (காலை உணவு/பகல் உணவு/பரிசுப்பை உள்ளடக்கியது.) மற்றும் கண்கவர் பரிசுகள். கோல்ஃப் விளையாடும் அனைவரையும் இதில் கலந்து ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம். தொடர்புக்கு: தயாளன் (017- 8809 454) கிறிஸ்டோபர் கே (019-6216 194)
- **நீலாய், புனித திரேசா ஆலயம்- 2019 தூதுரைப்பணி ஆண்டில் அதிகாரப்பூர்வ தூதுரை ஆலயம்** புனித திரேசா தூதுரைப்பணியின் பாதுகாவலி. இந்த ஆலயத்திற்கு திருயாத்திரை மேற்கொண்டு, திருப்பலியில் கலந்து, செபித்து, தூதுரைப்பணியில் நாமும் பங்குகொள்வோம்.
- **மருத்துவமனை மற்றும் வீடுகளில் இருக்கும் நோயாளிகளின் குடும்பத்தினரின் கவனத்திற்கு:** தயவு செய்து பங்கு அலுவலகத்தில் தெரிவிக்கவும். கூடியமட்டும் குருவானவர்கள் வந்து சந்திப்பார்கள்.
- **நற்கருணைப் பணியாளர்கள் மற்றும் சிறப்புப் பணியில் உள்ளவர்களின் கவனத்திற்கு:** உங்கள் சோன்/அதிச வில் உள்ள நோயாளிகளுக்கு ஒவ்வொரு வாரமும் நற்கருணை வழங்குவதில் முக்கய அக்கறைக் காட்டுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- **திருப்பலிக்கு முறையாக உடை அணிந்து வருக!:** பங்கு மக்கள், பொறுப்பாளர்கள், திருப்பலியில் பணி செய்வோர் அனைவரும் நற்கருணைக் கொண்டாட்டத்திற்கு முறையாக உடையணிந்து வருமாறு கேட்டுக்கொள்கிறோம். அரைக்கால் சட்டை/உடல் தெரியும் ஆடைகள், பனியன், ஜப்பான் மிதியடி ஆகியவற்றை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்களுடைய சிறந்த ஆடையை அணிந்து வந்து திருப்பலிக்கு உரிய மரியாதையை வழங்குங்கள்.
- **வரவேற்புப் பணிக்குழுவினர்:**
  - திருப்பலியின் போது அதிகமான வரவேற்புப் பணிக்குழுவினர் தேவைப்படுகின்றனர்
  - அதிச/சோன் அளவில் திருப்பலி வழிநடத்தும்போது குறைந்தது 6 பேர் தேவை
  - உங்களின் உடை கண்ணியமாக இருப்பதை உறுதி செய்துகொள்ளுங்கள்
  - திருப்பலிக்கு 15 நிமிடத்திற்கு முன்னதாக வரவும்.செப உணர்வோடு பணி செய்யுங்கள்.
  - முகமலர்ச்சியோடு உங்கள் பணியைச் செய்யுங்கள்
  - கூடுதல் விவரங்களுக்கு: மேரி ராஜு அல்லது உங்களுடைய அதிச பொறுப்பாளரை தொடர்புகொள்ளுங்கள்.

வரவேற்புப் பணிக்குழுவினர்(ஆங்கிலம் & தமிழ்) 17/2/2019 திருப்பலிக்குப் பின் குருவானவரோடு சந்திப்பு நடைபெறும். இடம்: ஆலய மண்டபம். நேரம்: காலை 8.45 (தமிழ்) 10.45 (ஆங்கிலம்)

- **அருட்பணி: சேவியர் அவர்களோடு தேனீர் உரையாடல்:** ( நெகிரி மாநில பேரணியை முன்னிட்டு) நாள்: 24/2 (ஞாயிறு) மாலை 6.10 வரை; மினவுதல் தேவாலய தூதுரை இல்லம்: வயது 18-39 வரை. தொடர்புக்கு: சப்ரீனா (013-2887624)
- **16-17 பிப்ரவரி - விண்ணேற்பு ஆலயம், பெட்டாலிங் ஜெயா** - ஆலயத்தின் வைரவிழா கொண்டாட்டத்தையொட்டி நினைவுப்பரிசுகளை விற்பனை செய்ய இங்கு வருகை தருகிறார்கள்.
- **19 & 20 பிப்ரவரி -** குருக்களின் மாதாந்திர தியானம், **APC, K.L.**
- **21-23 பிப்ரவரி - அருட்பணி ஜோர்ஜ் அவர்கள் பயிற்சிக்காக செல்கிறார்(சமயங்களுக்கிடையிலான உரையாடல் )**
- **22 பிப்ரவரி (வெள்ளி) திருமணி ஆராதனை, திருப்பலி (தமிழ்) திரு இருதய ஆண்டவர் சிற்றாலயம், மார்ஜெரி**
- **24 பிப்ரவரி :** தித்தி - திருப்பலி மாலை 4.30 / கம்போங் செபீர் திருப்பலி மாலை 7.00
- **பிப்ரவரி 27 - அதிச ஒருங்கிணைப்பாளர் குழு கூட்டம்** இரவு 8.00 மினவுதல் தேவாலய மண்டபம்